**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.**
**Date : 13.03.2025.**
**C.C. 356/2022**

Accused present. Both side counsels present.

**அ.சா. 1 திருமதி. கண்மணி என்கிற முனியம்மாள் அவர்கள் முன்னிலையாகி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.**

**எனக்கு எழுத, படிக்க தெரியும். புகாரில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். புகாரில், புகார் கொடுக்கப்பட்ட தேதி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் முருகன், என் மகன் வெங்கடேசன், என் அக்கா மகன் பெருமாள், என் மாமனார் சுப்பன், எங்கள் பக்கத்து வீட்டுக்காரர் வேல்முருகன், என் கொழுந்தனார் பழனிச்சாமி, அவரது மகன் நவநீதகிருஷ்ணன் ஆகியோர்கள், பால்பாண்டி என்பவரை இந்த சம்பவம் நடைபெற்ற அதே நாளில் ஒன்று சேர்ந்து தாக்கியதாக இதே நீதிமன்றத்தில் ஜெயச்சந்திரன் என்பவர் கொடுத்த புகாரின்பேரில் SC.No. 2/2020 என்ற வழக்கு இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது என்ற விபரம் தெரியும். போலீசார் விசாரணையின்போது திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் செம்பட்டி போலீசார், எனது கணவரிடம் வாக்குமூலம் பெற வந்தபோது அங்கிருந்த எங்களது சாதியை சார்ந்த ஆதி தமிழர் நிர்வாகிகள் மேற்படி சார்பு ஆய்வாளரிடம் அவர்களாகவே புகார் எழுதி தருவதாக கூறியதாக சொல்லி இருக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி தற்போது, நாங்கள் கொடுத்த புகாரை செம்பட்டி போலீசார் பெறவில்லை என்பதால் நாங்களாகவே SP அலுவலகத்தில் புகார் கொடுக்க போவதாக சொல்லிவிட்டதாக கூறிகிறார். புகாரை பெற மறுத்துவிட்டதால் செம்பட்டி போலீசார்மீது, அவரது உயர் அதிகாரிகளிடம் புகார் எதுவும் தரவில்லை.**

ஆதி தமிழர் பேரவை நிர்வாகிகள் ஆலோசனையின்பேரில் இந்த புகார் கொடுக்கப்பட்டதாக போலீசார் விசாரணையில் சொல்லி இருக்கிறேன் என்றால் இல்லை. புகாரில் வேலு நாயக்கர் ஓட்டலுக்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 03.00 மணிக்கு சென்றதாக குறிப்பிட்டு இருக்கிறேன். புகாரில் நாகராஜ் மற்றும் பால்பாண்டி ஓட்டலில் சாப்பிட்டு கொண்டு இருந்ததாக சொல்லி இருக்கிறேன் என்றால் சொல்லி இருக்கிறேன். புகார் மற்றும் போலீசார் விசாரணையின்போது நாகராஜ், எனது கணவர் முருகனின் சட்டையை பிடித்துக் கொள்ள, பால்பாண்டி எனது கணவரை கட்டையால் இடுப்பு, கால், கை ஆகிய இடங்களில் அடித்தாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் பொய் சொல்லி இருக்கிறேன் என்றால் இல்லை. போலீசார் விசாரணையில் நான் வேலு நாயக்கர் ஓட்டலுக்கு சொல்லவில்லை என்று சொல்லி இருக்கிறேன் என்றால் இல்லை, போயிருக்கிறேன். போலீசார் விசாரணையில் இவ்வழக்கில் அசா. 1, 2, 3 மற்றும் சுப்பன், பழனிச்சாமி, நவநீதகிருஷ்ணன், பெருமாள், வேல்முருகன் ஆகியோர்கள் கடப்பாறை மற்றும் கம்புகளுடன் பச்சைமலையன் கோட்டை – நடுப்பட்டி செல்லும் ரோட்டில், ஊர்க்காலனி ரோட்டின் அருகே இருந்ததாக சொல்லி இருக்கிறேன் என்றால் சொல்லவில்லை. பால்பாண்டியை அடிக்கும் தகராறில் கீழே விழுந்ததில் என் கணவருக்கும், என் மகனுக்கும் காயம் ஏற்பட்டதாக சொல்லி இருக்கிறேன் என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல யாரும் என்னையோ அல்லது என் மகனையே அடிக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும், எதிரிகள் என் கணவரையோ, மகனையோ அடிக்கவில்லை என்றும், எதிரிகள்

**எங்கள் மீது வழக்கு தொடுத்து இருப்பதால், அதில் இருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்து இருக்கிறோம் என்றால் சரியல்ல.**

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2025.03.13 18:20:46 +0530